# 137 : அரசினர் பலவகை தொழில் நுட்பக் கல்லூரி, கந்தர்வக்கோட்டை - 613 301.

**சுற்றறிக்கை எண்150 / க4/2025 நாள்.09.01.2026**
**திருவள்ளுவராண்டு / 2056 / விசுவாவசு/ மார்கழி-25**

பொருள் : கணக்கு - அரசினர் பலவகை தொழில் நுட்பக் கல்லூரி, கந்தர்வக்கோட்டை. 2025-2026 வருமான வரி கணக்கு தாக்கல் செய்வது தொடர்பான -அறிவுரைகள்- வழங்குவது - தொடர்பாக.

-----

இக்கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களிடமிருந்து 2025-2026-ஆம் நிதி ஆண்டிற்கான வருமான வரி பிப்ரவரி 2026 -ஆம் மாத ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட வேண்டியுள்ளதால் , அனைத்து ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் மார்ச் 2025 முதல் பிப்ரவரி 2026-ஆம் மாதம் முடிய பெற்ற/ பெறப்படும் ஊதியம் , ஊதிய நிலுவைத்தொகை ,சரணடர், தேர்வுப் பணி (Internal & External & Central Valuation) மதிப்பூதியம் மற்றும் பல்வேறு பணிகளுக்காக பெற்ற கைமாறு ஊதியத்தொகை (Exam/TFC/TNEA/NSS/YRC/Placement/Add on Course/Hostel/ Remuneration etc.) அத்துடன் பிற இதர வருமானங்கள் (நிலையான வைப்புத் தொகைக்கான வட்டி, வீட்டு வாடகை முதலானவை) இருப்பின் அதன் விவரங்களையும் சேர்த்து உரிய படிவங்களில் பூர்த்தி செய்து 1 பிரதி மட்டும் 23.01.2026-க்கு முன்பாக தவறாமல் உரிய வழியாக முதல்வருக்கு சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அதற்கான வருமானவரிப் படிவத்தினை www.gptcgkt.com (Downloads Income Tax 2025-26) இணையதளம் மூலம் மட்டுமே பதிவிறக்கம் செய்து கொள்ளும்படி அறிவுறுத்தப்படுகிறது.

மேற்குறித்த தேதிக்குள் வருமானவரி பிடித்தம் பற்றிய அறிக்கை சமர்ப்பிக்காமல் கால தாமதமாக வருமானவரி அறிக்கை சமர்ப்பிக்கும் பணியாளர்களுக்கு பிப்ரவரி 2025-ஆம் மாதத்திற்கான ஊதியத்தினை உரிய காலத்தில் பெற்று வழங்க இயலாது எனவும், இதனால் ஏற்படும் கால தாமதத்திற்கு அலுவலகம் பொறுப்பாகாது என்றும் சம்பந்தப்பட்ட பணியாளர்களே இதற்குப் பொறுப்பாவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

1. வருமானவரி அறிக்கையினை பழைய முறை(Old Regime) அல்லது புதிய முறையில்(New Regime) மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும்.

2. ரூ.2,50,000/-த்திற்கும் குறைவாக ஆண்டு வருமானம் பெறக்கூடிய பணியாளர்களும் Nil Statement வருமானவரி அறிக்கையினை கண்டிப்பாக சமர்ப்பிக்க வேண்டும்.

3. வருமானவரி அறிக்கையில் (It Statement) நிரந்தர கணக்கு எண்(PAN No) கட்டாயமாக குறிப்பிட வேண்டும்.

4. வருமான வரி விதிகளின்படி, பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தின் கீழ் 80CCD(1B) ன் கீழ் கூடுதலாக கழிக்கப்படும் ரூ.50000/- கழிக்க வழிவகை இல்லை எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

5. வருமானவரி விதிகிளின் படி, அரசினர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, கந்தர்வக்கோட்டை முதல்வர் குடியிருப்பு மற்றும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் குடியிருக்கும் பணியாளர்கள் வீட்டு வாடகை படியினை(HRA) முழுமையாக கழிக்க வழிவகை இல்லை என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

   (மேற்குறிப்பிட்ட வ.எண்.4 மற்றும் 5-ல் குறிப்பிடப்பட்டவை வருமான வரித்துறை அலுவலரின் அறிவுறுத்தலின்படி செயல்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.)

6. அனைத்து பணியாளர்களும் (அரசு குடியிருப்புகள் மற்றும் பிற வாடகை வீட்டில் குடியிருப்போர்) வருமானவரி துறை விதிகளின்படி 10% ஊதியத்திற்கு (10% of pay+DA) அதிகமாக செலுத்தப்பட்ட வீட்டு வாடகை மட்டும் கழிக்க வேண்டும்.

7. பழைய முறை வருமானவரியில் தாக்கல் செய்ய விரும்பும் பணியாளர்கள் ஒவ்வொரு வருடமும் அடுத்த நிதியாண்டு தொடங்கும்போதே அலுவலகத்தில் தெரிவிக்க வேண்டும்.(இது 2023-2024 ஆம் நிதியாண்டு முதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.)

8. அறக்கட்டளைகளுக்கு நன்கொடை வழங்குதல் போன்ற இனங்களை வருமானவரி படிவத்தில் குறிப்பிடக்கூடாது.

9. வீட்டுக்கடனுக்கான தொகையை தனது வருமானவரி அறிக்கையில் கழிக்க கோரினால் வீட்டுக்கடனுக்கான ஆணையரின் முன் அல்லது பின் அனுமதி பெற்றிருக்க வேண்டும்.மேலும் வீட்டுக்கடன் பெறும்போது கூட்டுக் கணக்காக (Joint Account) தொடங்கி இருந்தால், வீட்டுக் கடனுக்கான தொகையை தனது வருமானவரி அறிக்கையில் கழிக்கக் கோரினால் கூட்டாக கணக்கு வைத்துள்ள நபரின் (கணவன்/மனைவி) அலுவலகத்திலிருந்து , அவரது வருமானவரி கணக்கில் கழிக்கவில்லை என்பதற்கான சான்றிதழ் கட்டாயம் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

10. படிவம் 12 பிபி (form 12 BB with Annexure 1) கண்டிப்பாக பூர்த்தி செய்து சான்றொப்பமிட்டு இணைத்தால் மட்டுமே வீட்டு வாடகைக் கழிவும் மற்றும் இதர வருமான வரி சேமிப்பு திட்டத்தின்கீழ் வரி விலக்கும் பெற இயலும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

    மேலும் , Form 10E இனங்களை தனிநபர் வருமானவரி தாக்கல் செய்யும்போது கழித்து, வருமான வரி விலக்கு பெற்றுக் கொள்ள தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

முதல் பிரதியுடன் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டியவை:

11. கல்விக்கட்டணம் LIC, SSY(Sukanya Samriti Yojana), Medical Insurance போன்ற கட்டணங்கள் செலுத்தியதற்கான இரசீதுகள் (Original 1 copy) மற்றும் PLI முதல் பக்கம் (BOND) நகல் இணைக்கப்பட வேண்டும், சேவை வரியை (CGST & SGST) கழிக்க இயலாது. மேற்கூறிய கட்டணங்களை ஊதியத்தின் சம்பள சேமிப்பு திட்டம்(SSS) வாயிலாக செலுத்தும் பணியாளர்களும் அதனை படிவத்தில் குறிப்பிட வேண்டும்.)

12. பிள்ளைகளின் கல்விச் செலவிற்காக கல்லூரி/பள்ளிகளில் செலுத்தப்படும் கல்விக் கட்டணத்திலிருந்து Tution fees தொகையை மட்டுமே வருமானவரி அறிக்கையில் கழிக்க இயலும். ரசீதில் Tution fees என்று குறிப்பிடாமல் வேறு தலைப்பின் கீழ் கட்டணங்கள் குறிப்பிட்டிருந்தால் அத்தொகைகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. பள்ளி/கல்லூரிகளிலிருந்து Tution fees செலுத்தியதற்காக வழங்கப்படும் Bonafide Certificate-ல் வருமானவரி அறிக்கையில் அத்தொகையை கழிக்க கூடிய ஊழியரின் பெயர்(அதாவது S/o., D/o. தந்தை அல்லது தாயாரின் பெயர் கண்டிப்பாக இடம் பெற்றிருக்க வேண்டும்.

13. வாடகை குடியிருப்பில் குடியிருப்போர் வீட்டு உரிமையாளரின் கையொப்பமுடன் கூடிய வரிவில்லை ஒட்டப்பட்ட இரசீது (Original-1 Copy) பெற்ற பின்னரே வீட்டு வாடகை செலுத்துவோருக்கான வரி விலக்கை பெற முடியும். வீட்டின் உரிமையாளரின் PAN CARD நகல் மற்றும் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.

14. பணியாளர்கள் சமர்ப்பிக்கும் வருமானவரி படிவத்துடன் 2025-26 நிதியாண்டில் பெறப்பட்ட அனைத்து கைமாறு ஊதியத் தொகைகளும் விடுதலின்றி

வருமானவரியில் சேர்க்கப்பட்டுள்ளன எனவும், அதில் தவறுகள் ஏதேனும் பிற்காலத்தில் கண்டறியப்பட்டால் அதற்கு சம்பந்தப்பட்ட பணியாளரே முழு பொறுப்பு எனத் தெரிவிக்கும் சுயச்சான்று கட்டாயம் இணைக்கப்பட வேண்டும்.

15. கல்லூரி இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படும் வருமானவரி படிவத்தில் பணியாளரின் IFHRMS எண்ணை உள்ளீடு செய்து படிவத்தை பூர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், வருமானவரி அறிக்கையினை முழுமையாகவும், அடித்தல் திருத்தலின்றியும் மேலே குறிப்பிட்டுள்ள தேதிக்குள் முதல்வருக்கு சமர்ப்பிக்குமாறு இக்கல்லூரிப் பணியாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**குறிப்பு:**
Pay Drawn பதிவிறக்கம் செய்யும் முறை : களஞ்சியம் 2.0 - Report – Pay Drawn – Financial year 2025-2026 - Submit.

ஒம்/- மு.ஜெயபால்
முதல்வர்(மு.கூ.பொ.)

இணைப்பு : படிவம்,சுயச்சான்று

பெறுநர்:

1. முதல்வர்
2. அனைத்து துறைத்தலைவர்கள்/
3. உடற்கல்வி இயக்குநர்/ சிற்றூழியர் பொறுப்பு அலுவலர்

} பணியாளர்களிடையே சுற்றுக்கு

4. முதல்வரின் நேர்முக உதவியாளர்
5. பொருளாளர்
6. கண்காணிப்பாளர் நிர்வாகம்/கணக்கு
7. அமைச்சுப்பணியாளர்கள் சுற்றுக்கு

படி: திரு.ச.இசையழகன்
விரிவுரையாளர் / அமைப்பியல் } - கல்லூரி இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் பொருட்டு அனுப்பலாகிறது.

படி: க4 இருப்பு கோப்பு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

9/1/26
கண்காணிப்பாளர்

9.1.26